1

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8069843

C

1. District மாவட்டம் : Dharmapuri | PS: காவல்நிலையம் Vigilance and Anti-Corruption | Year ஆண்டு 2020 | FIR No. மு.த.அ. எண் 5/AC/2020 | Date: நாள் 12.11.2020

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2016 | Sections பிரிவுகள்: 7, 12
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 12.11.2020 Prior to 13.35 PM
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம் 12.11.2020 at 09 PM
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : SUO-MOTO
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Office of the Divisional Engineer, Highways Department. (Construction & Maintenance), Dharmapuri. About 3km south
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G.V. KIRUSHNAARAAJAN | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. VETRAYAN
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 48/2020 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Deputy Supdt. of Police | (g) Address : முகவரி Vigilance and Anti-Corruption, Krishnagiri, i/c Dharmapuri.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. T.S. Elangovan (48), S/o Saarangabaani, Assistant Engineer, Highways Department, Palacode Sub Division, Palacode Taluk, Dharmapuri District.
2) Tr. D. Angappan (43), S/o Dharmpal, Road Inspector, Highways Department, Palacode Sub-Division, Palacode Taluk, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
SUO-MOTO
[signature] 12/11/20

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 12/11/20

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
13.11.2020 / 08.00 Hrs

Name: பெயர் G.V. KIRUSHNAA RAAJAN
Rank: நிலை Deputy Supdt. of Police, Krishnagiri, I/c Dharmapuri. No. எண் ..........

தர்மபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு. எண் 5/AC/2020 u/s 7 and 12 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண் 12 ன் இணைப்பு.

12.11.2020 ஆம் தேதி தர்மபுரி நெடுஞ்சாலைத்துறை (கட்டுமானம் மற்றும் பராமரிப்பும்) கோட்ட பொறியாளர் அவருடைய அலுவலகத்தில் நடத்தும் மாதாந்திர கூட்டத்தில், தர்மபுரி மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை சார்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக்கொண்டு அந்த கையூட்டு பணத்தை மாதாந்திரக் கூட்டத்தின் போது கோட்ட பொறியாளர் அலுவலக பணியாளர்களுக்கு பங்கு பிரித்துக் கொடுப்பதாக கிடைத்த தகவலின்பேரில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யும் பொருட்டு அரசு சாட்சிகளான தர்மபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டாட்சியர், அலுவலகத்தில் பணிபுரியும் மண்டல துணை வட்டாட்சியர் திருமதி எல்.கீதா மற்றும் தர்மபுரி வருவாய் ஆய்வாளர் திரு எஸ்.முருகன் ஆகியோர் முன்னிலையில் 12.11.2020 ஆம் தேதி சுமார் 13:30 மணி முதல் இரவு 21.00 மணி வரையில் என்னால் ஒரு திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. திடீர் தணிக்கையின்போது கோட்ட பொறியாளர் அலுவலக நுழைவு வாயில் அருகில் ஒரு நபர் தனது கையில் கருப்பு நிற பை ஒன்றை வைத்திருந்தார். அவரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் டி.அங்கப்பன் என்றும் பாலக்கோடு நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர் அலுவலகத்தில் சாலை ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை அழைத்துக் கொண்டு கோட்ட பொறியாளர் அலுவலகத்திற்குள் செல்லப்பட்டது. அப்போது கோட்ட பொறியாளர் திரு ஆர்.என்.தனசேகரன் அவர்கள் தலைமையில் அவருடைய அறையில் வைத்து மாதாந்திர கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவரிடம் நான் என்னையும் என்னுடன் வந்த அரசு சாட்சிகளையும் அறிமுகம் செய்து கொண்டு திடீர் தணிக்கைக்கு வந்த விபரத்தை எடுத்துச் சொன்னேன். அந்த அறையில் இருந்த ஒவ்வொரு அலுவலர்களிடமும் அவர்கள் எவ்வளவு பணம் வைத்துள்ளார்கள் என்ற விவரம் குறித்து கேட்டேன். அவரவர்கள் வைத்திருந்த பணத்திற்கு உண்டான அவர்களுடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அந்தந்த நபர்களிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. ஆனால் பாலக்கோடு நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர் திரு டி.எஸ்.இளங்கோவன் அவர்களிடம் பணம் ரூ 65,000/- இருந்தது. அந்தப் பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க, அவர் தனது சொந்த பணம் என்றும் தெரிவித்தார். ஏற்கனவே எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி

நெடுஞ்சாலைத் துறை சார்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக, முறையற்ற வகையிலோ அல்லது நேர்மையற்ற முறையிலோ தனது பொது கடமையை ஒப்பந்ததாரர்களுக்கு சாதகமாக செய்வதற்காகவோ அல்லது செய்து கொடுத்ததற்காகவோ அவர்களிடமிருந்து கையூட்டாக பெற்றிருக்கக் கூடும் என நம்புவதற்கு போதுமான சந்தேகம் இருந்ததால் அந்தப் பணம் என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டது. பிறகு பாலக்கோடு நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர் அலுவலகத்தில் சாலை ஆய்வாளராக பணி புரியும் திரு டி.அங்கப்பன் அவர்கள் கையில் வைத்திருந்த கருப்பு நிற பையை சந்தேகத்தின் அடிப்படையில் அரசு சாட்சிகளின் முன்னிலையில் சோதனை செய்து பார்க்கையில் அந்தப் பையினுள் 53 எண்ணிக்கையில் காக்கி காகித உறைகளும் ஒரு வெள்ளை நிற சாக்ஸ் துணி உறையும் இருந்தது. அந்த சாக்ஸ் துணி உறையை பார்த்தபோது அதில் 500 ரூபாய் தாள்கள் 400 எண்ணிக்கையில் மொத்தம் ரூ 2,00,000/- இருந்தது. மேலும் அந்த பையினுள் 500 ரூபாய் மற்றும் 200 ரூபாய் தாள்கள் மடிப்புடன் இருந்தது. அதை எண்ணிபார்க்கையில் அதில் மொத்தம் ரூ.26,600/- இருந்தது. அந்த 53 காக்கி காகித உறைகளை ஆய்வு செய்து பார்க்கையில் அதில் மொத்தம் ரூ 4,93,400/- இருந்தது. அந்த காகித உறைகளின் மேல் கோட்ட பொறியாளர் அலுவலக பணியாளர்கள் மற்றும் இதர அலுவலக பணியாளர்கள் பெயர்களும் பதவியும் குறிக்கப்பட்டிருந்தது. அந்த கருப்பு நிற பையில் இருந்த மொத்த பணம் ரூ.7,20,000/-த்தை குறித்து சாலை ஆய்வாளர் திரு டி.அங்கப்பன் அவர்களிடம் விளக்கம் கேட்க, அதில் பணம் வைக்கப்பட்டிருந்த விவரம் தனக்கு தெரியாது என்றும், இன்று காலை உதவி பொறியாளர் திரு டி.எஸ்.இளங்கோவன் அவர்கள் அவருடைய வாகனத்தில் இருந்து அந்த கருப்பு நிற பையை எடுத்து வர சொன்னதன் பேரில் தான் எடுத்து வந்ததாகவும் தெரிவித்தார். இதுகுறித்து உதவி பொறியாளர் திரு டி.எஸ்.இளங்கோவன் அவர்களிடம் கேட்க, திரு அக்பால் என்ற ஒப்பந்ததாரர் அவருக்கு கீழ் பணியாற்றிய பணியாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காக அந்த பணத்தை தன்னிடம் அவர் கொடுத்து வைத்திருந்ததாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும் நெடுஞ்சாலைத் துறை சார்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக, முறையற்ற வகையிலோ அல்லது நேர்மையற்ற முறையிலோ தனது பொது கடமையை அவருக்கு சாதகமாக செய்வதற்காகவோ அல்லது செய்து கொடுத்ததற்காகவோ ஒப்பந்ததாரர்களிடமிருந்து அவர் கையூட்டாக பெற்றிருக்கக் கூடும் என

நம்புவதற்கு போதுமான சந்தேகம் இருந்ததாலும் அந்த பணம் ரூ 7,20,000/- ஐ வைக்கப்பட்டிருந்த காக்கி காகித உறைகள் மற்றும் சாக்ஸ் துணி உறையுடன் என்னால் அப்போது மேற்கொள்ளப்பட்ட செயல்முறை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டது. மேலும் அந்தப் பணம் வைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு சாலை ஆய்வாளர்கள் சங்கம் மாநில பொதுக்குழு கோபிசெட்டிபாளையம் 9.12.2017 என்று வெள்ளை நிறத்தில் அச்சிடப்பட்ட கருப்பு நிற பையையும் கைப்பற்றப்பட்டது. அந்த செயல்முறை நடவடிக்கையின் போது ஒப்பந்ததாரர் திரு அக்பால் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான கோப்புகள் பார்வையிடப்பட்டு அவற்றின் ஒளி நகல் எடுக்கப்பட்டு அவற்றில் கோட்ட பொறியாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு மேல் விசாரணைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது. பாலக்கோடு உதவி பொறியாளர் திரு டி.எஸ்.இளங்கோவன் அவர்களின் செயல்பாடும் மற்றும் சாலை ஆய்வாளராக திரு டி.அங்கப்பன் அவர்களின் செயல்பாடும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றத்தை செய்துள்ளார்கள் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருந்தது.இது தொடர்பாக இன்று மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அந்த நகல் ஒன்றை எதிரிகள் இருவருக்கும் வழங்கப்பட்டது. ஆகவே மேற்படி கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் இன்று 12.11.2020 தேதி இரவு 21.30 மணிக்கு தர்மபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து தர்மபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 5/AC/2020 u/s 7 and 12 of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 ன் படி இன்று 12.11.2020 ஆம் தேதி இரவு 22.30 மணிக்கு வழக்குப்பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.7,85,000/- ஆகியவற்றை தர்மபுரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

12/11/20

Dy. Supdt. of Police
Krishnagiri V & AC
i/c Dharmapuri V & AC.